# சமூக நீதியை நிலைநாட்டுவதற்கு சாதிவாரிக் கணக்கெடுப்பு அவசியம்!

## அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பதிலுரை... 9- ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆகவே, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, மிகவும்பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மக்கள் மிகச் சிறப்பாக இந்த ஆட்சியில் வாழ்கிறார்கள். நம்முடைய உறுப்பினர்பி. அய்யப்பன் அவர்கள் DNCக்கும், DNTக்கும் என்ன வித்தியாசம் என்று ஒரு கேள்வி கேட்டார்கள். இப்போது certificate கொடுக்கச் சொல்லியிருக்கிறது. Denotified Tribes certificate என்கிற ஒரு certificate சேர்ந்து இருந்தது. இப்போது தனித்தனியாக கொடுக்கச் சொல்லியிருக்கிறது.

தற்போது பெரியார் விருதுக்கு ரூ.5 இலட்சம் கொடுக்கப்படுகிறது. பெரியார் விருதுக்கு முன்பு ரூ.1 இலட்சம் கொடுக்கப்பட்டது. நம்முடைய தளபதி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு பெரியார் பெயரால் வழங்கப்படும் விருதுக்கு ரூ.5 இலட்சம் வழங்கப்படுகிறது. இப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களையெல்லாம் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக நம்முடைய தலைவர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்.

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம். அது 1959ன்படி, 1960-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அந்த வாரியம் 2009-ஆம் ஆண்டு நலிவடைந்து விட்டது. தலைவர் கலைஞர் அவர்கள், அந்த நலிவடைந்த வாரியத்தை தூக்கிப் பிடித்ததையடுத்து, தற்போது அது மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறது. தற்போது 40 காதிகிராப்ட்கள் உள்ளன. அதன்மூலம் பொருட்களனைத்தையும் விற்பனை செய்கிறோம். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களும், தளபதி அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களுடைய வழியில் நல்லாட்சி நடத்தி வருகின்ற முதல்வர் அவர்கள் காதி கிராப்ட்டுக்கு நல்ல ஆதரவு கொடுத்து வருகிறார். அதன் மூலம் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. மேலும், மக்களுடைய வேலைவாய்ப்பினை அதிகரித்தல், உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழி வகுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது குறளகக் கட்டடம் இருக்கிறது. அதன் அடித்தளத்தில் காதி கிராப்ட் செயல்பட்டு வருகிறது. அதன்மூலம் நிறைய பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பொதுச் செயலாளர் அவை முன்னவர் அவர்களுக்கு காதி கிராப்ட் குறித்து நன்றாகத் தெரியும். அவர் நிறைய காதி கிராப்ட் பொருட்களை உபயோகப்படுத்துவார். ஏழை மக்களுடைய வாழ்வை வளப்படுத்துவதற்காக காதி கிராப்ட் இருக்கிறது. இதில் நிறைய schemes உள்ளன. கதர், கதர் பருத்தி, silkகதர் பட்டு உள்ளிட்ட நிறைய பொருட்கள் 40 காதி கிராப்ட் விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

**மண்பாண்டத் தொழிலாளர்கள்**

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு நிறைய உதவி செய்கிறோம். கிட்டத்தட்ட 4 கோடியே 44 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். 6,665 மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்கள் இருக்கின்றன. சோப்புத் தொழில் மூலம் 17 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்துள்ளோம். தற்போது காதி கிராப்ட் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தலைவர் கலைஞர் அவர்களின் revive செய்த பிறகு, நம்முடைய தளபதி அவர்களுடைய ஆட்சியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அதிகமாக விற்பனையாகின்றது. மக்களும் வாங்குகிறார்கள். நிறைய mobile van போட்டிருக்கிறோம். எல்லா இடங்களிலும் பொருட்களை விற்பனை செய்வது போன்று mobile van போடச் சொல்லியிருக்கிறோம். 60 கருப்பட்டி சொசைட்டிகள் உள்ளன. பதநீரையெல்லாம் விற்பனை செய்யச் சொல்லியிருக்கிறோம்.

உறுப்பினர் கள் இறக்குவது சம்பந்தமாக பேசினார்; அதெல்லாம் கிடையாது. பதநீர் என்பது சுண்ணாம்பு போட்டு இறக்குவது. பதநீர் குடித்தால் சூடு தணியும். அந்த மாதிரி பதநீரெல்லாம் குடிக்கலாம். இவ்வாறாக காதி கிராப்ட் நல்ல முறையில் இயங்கி வருகிறது. சுக்கு காபியை விற்பனை செய்கிறோம். எல்லோரும் சுக்கு காபி குடித்தால் உடம்பிற்கு நல்லது.

**பனைத் தொழில் வளர்ச்சி வாரியம்**

பனைத் தொழில் வளர்ச்சி வாரியம்: 1 பனை மரம் இருந்தால் நிறைய பலன்களைப் பெறலாம். தற்போதுகூட கிட்டத்தட்ட 1 கோடி பனை மரங்களை இராமநாதபுரம் மாவட்டத்தில் நம்முடைய நாராயணன் அவர்கள் வந்து நட்டார்கள். அந்த பனை மரத்திலிருந்து, பனம் பழத்திலிருந்து, பனங்காயிலிருந்து, குதம்பையிலிருந்து, அதன் சட்டத்திலிருந்து, கிழங்கிலிருந்து அனைத்துமே உபயோகப்படும். பனை மரத்தில் உபயோகப்படுத்தப்படாத பொருள் எதுவுமே இல்லை. அப்படிப்பட்ட பனை மரங்கள் நடுவதில் நம்முடைய சபாநாயகர் அவர்களும் மிகுந்த ஆர்வமாக இருப்பார்கள். ஒரு இலட்சம் பனை விதைகளை தருகிறேன் என்று கூறினார்.

## பனை பொருள் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை!

பேரவைத் தலைவர்: ஆண்டிற்கு ஒரு இலட்சம் பனை விதைகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறேன். அதைத்தான் அண்ணன் எர்ணாவூர் நாராயணன் அவர்கள் உங்கள் ஊருக்கு வந்து தந்திருக்கிறார்.

R.S. ராஜகண்ணப்பன்: எங்களிடம் கொடுக்க வேண்டும் என்று அவசியமில்லை. நீங்கள் அவரிடம் கொடுத்தாலும் சரிதான். பனைத் தொழில் வாரியத்திற்கு ஒரு வாரியத் தலைவரை நியமித்திருக்கிறோம்.

இங்கே நிறைய உறுப்பினர்களும் பேசினார்கள். கண்டனூர் நம்முடைய உறுப்பினர் மாங்குடி, சோப் ஆலை, நம்முடைய முன்னாள் ஒன்றிய அமைச்சர் சிதம்பரம் factory சம்பந்தமாக என்னிடம் சொல்லியிருந்தார். அவர் ஒரு கோரிக்கை வைத்திருந்தார். காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நிச்சயமாக கண்டனூர், அவருடைய சொந்த ஊர். காதி கிராமத் தொழில் வாரியம் மூலம் ரூ.5 கோடி கொடுத்தோம். காதி வாரியத்தில் இடம் இல்லை. 60 சங்கங்களுக்கு தலைவர் நியமித்தோம். காமராஜர் சிலை ஒன்று எங்களுடைய தொகுதியில் வைக்கப்படுகிறது. பனையோலை முடைவதில் நாடார் சமூக மக்களுக்கு 3,000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

ஆண்டிகையில் ஓடி இருக்கும் அதுவும் உனக்கில்லையே என்று கவிஞர் கண்ணதாசன் அவர்கள் காமராஜரைப் பற்றி பாடினார். பண்டாரம் கையிலாவது ஓடுயிருக்கும். அதுவும் உனக்கில்லையே. அவர் சாகும்போது 3 வேட்டி, 3 சட்டை மட்டும்தான் இருந்தது. 110 ரூபாய் இருந்தது. அப்படிப்பட்ட தலைவர் காமராஜர்; அவரை நாங்கள் மறக்கவில்லை. அவருடைய பணிகள் பாராட்டுக்குரியது. அவருடைய சிமெண்ட் சிலையை எடுத்துவிட்டு, வெண்கல சிலையாக நம்முடைய தொகுதியில் வைக்கிறோம்.

அதே மாதிரி நிறைய சிலைகள் வைக்கிறோம். முத்துராமலிங்க தேவருக்கு வைத்திருக்கிறோம். நம்முடைய தலைவர் அவர்கள் எல்லா சமுதாயத்தையும் ஒன்றாக பாவிக்கின்ற காரணத்தினால், அனைத்து சமுதாய மக்களுக்கும் மணிமண்டபம் அமைத்திருக்கிறார்; எல்லாவற்றிற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நீங்கள் அனைவரும் வெட்டு தீர்மானங்கள் கொடுத்திருக்கிறீர்கள். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலனில் 80 வெட்டு தீர்மானங்களும், கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியத்தில் 78 வெட்டு தீர்மானங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சமூக நீதியைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. 69 சதவிகித இட ஒதுக்கீட்டை திராவிட முன்னேற்றக் கழகம் பாதுகாக்கும், பாதுகாக்கும், பாதுகாக்கும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக பாதுகாப்பார். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நல்ல ஆக மொத்தம் 158 வெட்டுத் தீர்மானங்கள், நீங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அறிவிப்புகள்**

1) பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களுக்கு மாறிவரும் காலச் சூழலுக்கேற்ப, புதிய முன்னெடுப்பாக தற்போது வழங்கப்பட்டு வரும் பித்தளை தேய்ப்பு பெட்டிகளுக்கு பதிலாக திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டிகள் 1,200 பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு வரவு செலவு மதிப்பீட்டில் 73 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 1351 விடுதிகளில் 658 விடுதிகளுக்கு DTH இணைப்புடன் LED தொலைக்காட்சி வசதிகள் ஏற்கனவே வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## மாணவர்களுக்கான விடுதிகளை புதுப்பிக்க நிதி ஒதுக்கீடு!

இந்த ஆண்டு இதுவரை இவ்வசதி வழங்கப்படாமல் உள்ள 693 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு DTH இணைப்புகளுடன் LED தொலைக்காட்சி பெட்டிகள் 2 கோடியே 93 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. சீர்மரபினர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்கள் பதிவு செய்தல், ஏற்கனவே பதிவு பெற்ற உறுப்பினர்கள் அவர்களது விவரங்களை புதுப்பித்தல், பதிவு செய்த உறுப்பினர்கள் நிவாரணத் தொகை கோரி விண்ணப்பம் செய்தல், அவர்களுக்கு உதவித் தொகைகளை துரித காலத்தில் வழங்குதல் ஆகிய பணிகளை ஒருங்கிணைத்து எளிமைப் படுத்தும் வகையில் தமிழக மின் ஆளுமை முகமை மூலம் இணைய வழி சேவைகள் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். இதற்கு தேவைப்படும் நிதி 15 இலட்சம் ரூபாய் வாரிய நிதியிலிருந்து செலவிடப்படும்.

4. சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய பெரு நகரங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு தரமான உணவு வழங்குவதற்காக, தலா ஒரு ஒருங்கிணைந்த பொது சமையலறை 2 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். அங்கேயே சமைத்து கொடுக்கப்படும்.

5) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் முக அங்கீகார செயலி நிறுவுதல் (Face Authentication App), கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Camera) பொருத்துதல் மூலம், "விடுதிகள் மேலாண்மை தகவல் அமைப்பு" HMIS (Hostel Management Information System) ஆகியவை 10 கோடியே 59 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

6) 290 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளின் சமையலறை பயன்பாட்டிற்காக புதிய பாத்திரங்கள் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

7) 692 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி விடுதிகளில் பயிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக விளையாட்டு உபகரணங்கள் 1 கோடியே 38 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

8) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியரின் நலன் கருதி 500 மாணவியர் பயன்பெறும் வகையில் பின்வரும் இடங்களில் 5 புதிய கல்லூரி விடுதிகள் 2 கோடியே 83 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப் படும்.

1) பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, அந்தியூர், ஈரோடு.

2) பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, கோவில்பட்டி, தூத்துக்குடி.

3) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, திட்டக்குடி, கடலூர்.

4) பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்ப கல்லூரி மாணவியர் விடுதி, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்.

5) பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிவகாசி, விருதுநகர்.

9) கல்லூரி விடுதிகளின் தேவையை கருத்தில் கொண்டு, 1400 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 19 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல பள்ளி விடுதிகள் 1 கோடியே 96 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்.

10) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி விடுதிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்கள் எதிர்வரும் காலங்களில் NEET, JEE போன்ற நுழைவுத்தேர்வுகளில் தேர்ச்சி பெற ஏதுவாக வினாவிடை வங்கி நூல்கள் 22 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

11) விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி வாடகை கட்டிடங்களில் இயங்கும் பின் வரும் 3 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி விடுதிகளுக்கு 50 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் சொந்த கட்டடங்கள் கட்டப்படும். இதன் மூலம் 520 மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

1. பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவியர் விடுதி, இராணிமேரி கல்லூரி வளாகம், சென்னை

2. பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, சாத்தமங்கலம், மதுரை

3. மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல கல்லூரி மாணவர் விடுதி, பென்னாகரம், தருமபுரி.

12. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளுதல். விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, சொந்த கட்டிடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

13. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 36 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகளுக்கு 3 கோடியே 85 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டவும், மேலும் கிராமப்புறங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகளுக்கு தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் (NREGA) கீழ் சுற்றுச்சுவர் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

14. மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படும் கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, அப்பள்ளிகளுக்கு 3 கோடி ரூபாய் செலவில் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

15. சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பத்திற்கு இயற்கை மரணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் மற்றும் விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை 1 இலட்சத்திலிருந்து 1 இலட்சத்தி 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் வழங்கப்படும்.

16. சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கான முதியோர் ஒய்வூதிய உதவித் தொகையை 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**கதர் மற்றும் கிராமத் தொழில்கள் அறிவிப்புகள்**

1. மண்பாண்ட தயாரிப்பில் ஆரம்ப நிலையில் உள்ள மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு அனுபவமிக்க பயிற்றுநர் மூலம் உரிய உபகரணங்களைக் கொண்டு கலைநயமிக்க மண்பாண்டங்கள் செய்திட பயிற்சி அவசியம் தேவைப்படுகிறது. எனவே, கீழ்கோத்தகிரி, புதுகோத்தகிரி, குந்தாகோத்தகிரி, கொல்லிமலை மற்றும் கூடலூர் - கோக்கால் ஆகிய பகுதிகளில் உள்ள 150 மலைவாழ் பழங்குடியினருக்கு நவீன கலைநயமிக்க மண்பாண்டங்கள் தயார் செய்வதற்கான பயிற்சிகள் ரூ.25.00 இலட்சம் செலவிலும் மற்றும் தென்காசி, சிவகங்கை, கடலூர், இராணிப்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டங்களில், மண்பாண்ட தொழிலில் ஈடுபட்டுவரும் 200 நபர்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லும் விதமாக நவீன உபகரணங்களைக் கொண்டு சந்தையில் எளிதில் விற்பனை ஆகக்கூடிய டெரக்கோட்டா மற்றும் அழகுமிக்க மண்பாண்ட பொருட்கள் தயாரித்திட தேவைப்படும் பயிற்சிகள் ரூ.20.00 இலட்சம் செலவிலும், ஆக மொத்தம் ரூ.45.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

2) "கதர் அங்காடிகள் கதர் வாரியத்தின் முகம்" என்பதை கருத்தில் கொண்டு அவற்றை நவீனப்படுத்துவது அவசியமாகும். அதன்படி, வாடிக்கையாளர்களை கவரும் விதத்திலும்,

கதர் வாரிய பொருட்களை அதிகளவில் காட்சிப்படுத்தி விற்பனையை அதிகரித்திடவும் ஈரோடு, திருவண்ணாமலை, கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள 3 கதரங்காடிகள் ரூ.45.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

**தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்**

**3) இராமநாதபுரம்** மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கிய தொழில் பனைத்தொழிலாகும். வறுமை கோட்டிற்கும்கீழ் உள்ள மக்கள் பெரும்பாலும் இத்தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீர், பனைவெல்லம், பனங்கற்கண்டு மற்றும் தும்பு போன்ற பனைபொருட்களை உற்பத்தி செய்து மற்றும் விற்பனை மேற்கொண்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். இப்பனைத்தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பனைபொருட்களை சந்தைப்படுத்த இராமநாதபுரம் சிவகங்கை மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு விற்பனை சம்மேளனம் 10,000 உறுப்பினர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. பனைத் தொழிலாளர்கள் பெரும்பாலானோர் தொழில் ஆரம்பித்திட தனிநபர்களிடம் முன்பணம் பெற்று அவர்கள் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லம் அனைத்தும் முன்பணம் பெற்ற தனிநபர்களிடம் குறைந்த விலையில் விற்பனை செய்து குறைந்த வருவாய் ஈட்டி வருகிறார்கள். எனவே, மாவட்ட சம்மேளனத்தின் மூலம் நேரடியாக பனை வெல்லம் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படுவதன் மூலம் பனைத் தொழிலாளர்களின் வருவாய் அதிகரித்திட இயலும் என்பதை கருத்தில் கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் பனைபொருட்கள் வர்த்தக மையம் ஒன்று ரூ.20.00 இலட்சம் செலவில் அமைக்கப்படும். 4) தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணைய மானாமதுரை கிளையில் பனந்தாரிகை தயாரிக்கும் இயந்திரங்கள் புதியதாக கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளன. இவற்றை இயக்கி உற்பத்தி மேற்கொள்ள தேவையான தொழில்நுட்பம் தெரிந்த தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் இப்பகுதியில் உள்ள ஆர்வமுள்ள நபர்களுக்கு போதிய தொழில்நுட்ப பயிற்சி வழங்கினால் உற்பத்தி திறன் அதிகரித்திடவும், இப்பகுதியில் உள்ள மக்களுக்கு வருவாய் ஈட்டிடவும் வழிவகுக்கும். எனவே தொழில்நுட்ப பயிற்சி 60 நாட்கள் 25 நபர்களுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ். இராஜ கண்ணப்பன் பதிலுரை வழங்கினார்.

---

# திருப்பத்தூர் தொகுதியில் இசைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

## சட்டப் பேரவையில் அ.நல்லதம்பி கேள்வி!

*சென்னை, ஜூலை 1 - சட்டப் பேரவையில் திருப்பத்தூர் தொகுதி உறுப்பினர் அ.நல்லதம்பி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அளித்த பதிலும் வருமாறு:*

**அ. நல்லதம்பி:** *திருப்பத்தூர் தொகுதியில் இசைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா? ஆம் எனில், எப்போது?*

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** *தற்போது வாய்ப்பில்லை.*

**அ. நல்லதம்பி:** *தங்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு வருகை தந்து, தொகுதியில் சுமார் 42,000 வாக்குகளைக் கூடுதலாகப் பெற பரப்புரை செய்த இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் சிலம்பாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், நாதஸ்வரம், தவில் கலைஞர்களும், குறிப்பாக, திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் தெருக் கூத்துக் கலைஞர்கள் அதிகமாக*



*உள்ளனர். இப்பகுதியில் கலை ஆர்வலர்கள் நலனைக் கருதி, திருப்பத்தூர் மாவட்டத்தின் தலைநகரில் இசைப்பள்ளி துவங்கக் கோரினேன். எனது கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு, கலைப் பண்பாட்டுத் துறையின் வாயிலாக ஜவஹர் மன்றம் துவக்கிட அனுமதி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, அந்தப் பள்ளியில் தற்போது குரலிசை மாணவர்கள் 18 பேரும், பரதநாட்டியத்தைச் சேர்ந்த மாணவர்கள் 21 பேரும், ஓவியம் 17 பேரும், சிலம்பாட்டம் 23 பேர். ஆக, 79 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். திருப்பத்தூரில் இசைப் பள்ளி துவங்கினால், கூடுதலான கலை ஆர்வலர்கள் பயன்பெறுவார்கள். அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** *கலைப் பண்பாட்டுத் துறையின்கீழ், நம்முடைய தமிழ்நாட்டிலே 17 மாவட்டங்களில் அரசு இசைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இசைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்ற இந்த சூழ்நிலையில், திருப்பத்தூருக்கு அருகிலே கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மாவட்ட அரசு இசைப் பள்ளி நடைபெற்று வருகிறது. எனவே, எதிர்காலத்தில் அவருடைய கோரிக்கையை நிதிநிலைமைக்கேற்ப முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக துறை பரிசீலிக்கும்.*

**அ.நல்லதம்பி:** *கலைப் பண்பாட்டுத் துறையின் மண்டல அலுவலகம் திருப்பத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** *ஏற்கெனவே தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, கோவை என 7 மண்டலங்களாக கலைபண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகிறது. எனவே, தேவையிருப்பின் உறுப்பினருடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.*

---

ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில்

# பள்ளிகளுக்கு மரக்கன்றுகள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் வழங்கினார்

ஈரோடு, ஜூலை 1–

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் சார்பில் கோபி நகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 1000 மரக்கன்றுகளை மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட அமைப்பாளர் கே.கே.செல்வம் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

நிகழ்வில் கோபி நகர்மன்ற தலைவர் என்.ஆர்.நாகராஜ், சுற்றுச்சூழல் அணி கைலாஷ் குமார், கோபி ஒன்றியக் கழகச் செயலாளர் சிறுவலூர் முருகன்,

பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ.வெள்ளியங்கிரி, பவானி தெற்கு ஒன்றியக் கழக துணைச் செயலாளர் சத்தியமூர்த்தி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவேங்கடம்,

இந்திரா துரைசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சுற்றுச்சூழல் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.